இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 336 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 32 – செவ்வாய்க்கிழமை 16 ஜுலை 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 336 : Thiruvalluvar Year - 2055 - Aani 32 - Tuesday 16 July 2024 - Madurai 12 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2024) திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி, புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில், ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை' விரிவுபடுத்தி தொடங்கி வைத்து, மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தினை ஆய்வு செய்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2024) திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி, புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை' ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விரிவுபடுத்தி தொடங்கி வைத்து, மாணவ, மாணவியர்களுக்கு உணவுப் பரிமாறினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.

### மாணவர்களின் படிப்புக்கு பசியோ, 'நீட்' தேர்வோ எதுவும் தடையாக இருக்கக்கூடாது! எந்தத் தடை வந்தாலும் அந்தத்

# தடைகளை உடைப்பதுதான் எங்கள் முதல் பணி!

## "முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட" விரிவாக்கத்தைத் தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**திருவள்ளூர், ஜூலை 16 -**

**"மாணவர்களின் படிப்புக்கு பசியோ, 'நீட்' தேர்வோ எதுவும் தடையாக இருக்கக் கூடாது. தடைகளை உடைப்பதுதான் எங்களின் முதல் பணி" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரியில் ஊரகப் பகுதி களிலும் "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" விரிவாக்கத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றும்போது உறுதிபடக் கூறினார்.**

**மேலும் "ஊரகப் பகுதிகளிலும் முதல மைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவு படுத்தப்பட்டதன் மூலம் மொத்தம் நாள் தோறும் 20 லட்சத்து 73 ஆயிரத்துக்கும் அதிகமான குழந்தைகள் சத்தான, சுவை யான காலை உணவை சாப்பிடுகிறார்கள்" என்றும் கூறியுள்ளார்.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2024) திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி, புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விரிவுபடுத்தி தொடங்கி வைத்து, மாணவ, மாணவியர்களுடன் உணவருந்தி, அவர்களுடன் உரையாடினார்.

திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி, புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விரிவுபடுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட் டத்தை நேற்று (15.07.2024) தொடங்கி வைத்து, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

மிக மிக மகிழ்ச்சியாக உங்கள் முன் னால் நின்று கொண்டிருக்கிறேன். என் மகிழ்ச்சிக்கு என்ன காரணம் என்று கேட் டீர்கள் என்றால், 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்', 'நான் முதல்வன்', 'புது மைப்பெண்', 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' என தமிழ்நாட்டில் இருக்க, பெண் கள் - குழந்தைகள் - மாணவர்கள் - இளைஞர்கள் என்று உங்களுடைய முன் னேற்றத்திற்கும், எதிர்காலத்திற்கும் முதலமைச்சராக இருந்து பணியாற்றக் கூடிய வாய்ப்பு, பாடுபடக்கூடிய எண்ணம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்து கொண்டிருக்கிறது. இந்த மகிழ்ச்சியை வழங்கிய தமிழ்நாட்டு மக்களான உங்க ளுக்கு முதலில் என்னுடைய நன்றி!

பள்ளிக்கு வரக்கூடிய குழந்தைகளு டைய பசியைப் போக்கவேண்டும் என்று முடிவு செய்து உருவாக்கிய திட்டம்தான், இந்த காலை உணவுத் திட்டம்!

**பாச உணர்வில் உருவான திட்டம்!**

சென்னையில், ஒரு பள்ளி விழா விற்குச் சென்றபோது, ஒரு குழந்தை, "இன்னும் காலை உணவு சாப்பிட வில்லை" என்று சொன்னதை கேட்டவு டனே, ஒரு பெற்றோருக்கே உரிய பாச உணர்வுடன் நான் உருவாக்கிய திட்டம் தான், இந்த காலை உணவுத் திட்டம்!

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

### காவிரி நீரை தர மறுப்பதா? கர்நாடக அரசுக்குக் கண்டனம்! அமைச்சர் துரைமுருகன் தலைமையில்

# இன்று சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூலை 16-**

**கர்நாடகா அணைகளிலிருந்து தமிழ் நாட்டிற்கு தண்ணீர் அளிக்க முடியாது என கர்நாடக அரசு தெரிவித்திருப்பதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

**மேலும் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் தலைமையில் சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர் களின் கூட்டத்தைக் கூட்டி காவிரி நீரைப் பெறுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வது குறித்து முடிவு எடுத்திட உத்தரவு பிறப்பித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காவிரி நடுவர் மன்றம் 05.02.2007 அன்று அளித்த இறுதி ஆணையினை யும், உச்சநீதிமன்றத்தின் 16.02.2018 தேதியிட்ட தீர்ப்பினையும், செயல்படுத்த, CWMA மற்றும் CWRC ஆகிய அமைப்பு களை அமைக்க உச்ச நீதிமன்றம் உத்தர விட்டது. இதன்படி, 2018 ஆம் ஆண்டு ஜூன் முதல் இவ்வமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இந்த தீர்ப்புகளின் படி தமிழ் நாட்டுக்கு கிடைக்க வேண்டிய நீரை சென்ற ஆண்டில் கர்நாடக அரசு விடுவிக் காததால், வேளாண் பெருமக்களுக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டது. இதுகுறித்து தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தை நாடி நீரைப் பெற்றது.

**மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது! உச்சநீதிமன்ற ஆணையை மீறுவதாகும்!**

தற்போதைய தென்மேற்குப் பருவ மழைக் காலத்தில், கர்நாடக அணை களின் நீர்வரத்தை கணக்கில் கொண்டு காவிரி நீர் ஒழுங்காற்று குழு (CWRC) மற்றும் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் (CWMA) ஆகிய அமைப்பு கள் தமிழ்நாட்டிற்கு பில்லிகுண்டுலுவில் கிடைக்க வேண்டிய நீரினை கணக்கிட்டு 12.07.2024 முதல் 31.07.2024 வரை நாளொன்றுக்கு ஒரு டிஎம்சி நீரை விடுவிக்க வேண்டும் என்று CWRC அமைப்பு ஆணையிட்டுள்ளது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்